Date:08.09.2023

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்

OS.27/2018

வா.சா.**2**

**பெயர்-** திரு.கோபி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் யார் சொல்லி பிராது எழுதப்பட்டது என்றால் என் அப்பாவே சொல்லி பிராது எழுதப்பட்டது. நான் எதுவும் சொல்லவில்லை. நளினி, கற்பகம் ஆகிய இருவரும் வழக்கை பற்றி எதுவும் சொல்லவில்லை. என் தகப்பனார் வழக்கு சொத்துக்களில் எதாவது பரிகாரம் கேட்டுள்ளாரா என்றால் பாகபிரிவினை பரிகாரம் கோரியுள்ளார். பூர்வீக சொத்துகளையும் அவர் சம்பாதித்த சொத்துக்களையும் அவரே அனுபவித்து வருவதாக தெரிவித்துள்ளார். அவருடைய வாழ்க்கைக்காக தேவைப்படுகிறது என்று கேட்டுள்ளார். நான் 1972ல் பிறந்தேன். நான் டிப்ளோமோ இன் மெக்கானிக் இன்ஜினியரிங் படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் ஓரளவிற்கு தெரியும். பிராது ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. நான் பிராதை படித்து பார்த்தேன். புரிந்துகொண்டேனா என்றால் ஓரளவிற்கு புரிந்துகொண்டேன். அதில் எந்தெந்த சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சொத்துவிபரம் எனக்கு தெரியும். அதில் எத்தனை அட்டவணை சொத்துக்கள் உள்ளது என்றால் 27 அட்டவணை சொத்துக்கள் உள்ளது. 3 பேர் பெயரில் உள்ள சொத்துக்கள் அதாவது அய்யப்பன், பாலமுருகன், என் பெயரில் உள்ள சொத்துக்கள் ஆகும். அய்யப்பன், பாலமுருகன் பெயரில் உள்ள சொத்துக்கள். தங்கைகள் நளினி, கற்பகம் ஆகியோருக்கு என் தந்தை உயில் எழுதி வைத்த சொத்துக்கள். என் தாத்தா பூர்வீக சொத்துக்களை குறித்து உயில் எழுதி வைத்தார். அதன் பிறகு, 72சென்டை பொறுத்து எனக்கும், அய்யப்பன், பாலமுருகன் ஆகியோருக்கும் ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்தார். அதன்பிறகு அந்த 72சென்ட் நிலத்தில் கம்பெனி கட்டுவதற்காக எனக்கு 24சென்ட் நிலம் வேண்டுமென்று கேட்டேன். அவர் பிரித்து எழுதி வைத்தார். 72சென்ட் நிலம் தாத்தாவின் பூர்வீக சொத்தாகும். அப்பா பெயரில் 2 பத்திரமும், அம்மா பெயரில் ஒரு பத்திரமும்,

ஆக 9ஏக்கர் 33 சென்ட் நிலத்திற்கு உள்ளது. அந்த சொத்து எந்த அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது என்றால் முதலில் காட்டப்பட்டுள்ளது. 9ஏக்கர் 33 சென்ட் நிலத்தை என் அப்பா பூர்வீக சொத்தின் வருமானத்தை கொண்டு வாங்கினாரா என்றால் இல்லை. அவரது வருமானத்தை கொண்டு அம்மா நகைகளை விற்று வாங்கினார். என் அப்பாவிற்கு எந்தவிதத்தில் வருமானம் என்றால் டயர் வண்டி ஓட்டினார். 2 சக்கர மாட்டுவண்டி ஒட்டினார். மாட்டுவண்டி வருமானத்தை கொண்டு சொத்தை வாங்கினார். மாட்டு வண்டியை எப்படி வாங்கினார் என்றால் அவரை கேட்டால் தான்தெரியும். பூர்வீக சொத்துக்கள் மொத்தம் 3 1/2 அல்லது 4 ஏக்கர் இருக்கும். பூர்வீக சொத்தில் ஒரு மோட்டார் பம்பு செட் உள்ளது. என் அப்பாவிற்கு இன்றைய தேதியில் மொத்தம் எவ்வளவு சொத்து உள்ளது என்றால் ஒரு 17, 18 ஏக்கர் நிலம் இருக்கும். என் பெயரில் உள்ள சொத்துக்கள் தனிப்பட்ட வருமானத்தை கொண்டு வாங்கப்பட்ட சொத்தா அல்லது பூர்வீக சொத்துக்களின் வருமானத்தை கொண்டு வாங்கப்பட்ட சொத்தா என்றால் எங்கள் மூவர் பெயரில் உள்ள சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களின் வருமானத்தை கொண்டு வாங்கப்பட்டது. அய்யப்பன் மற்றும் பாலமுருகன் பெயரில் உள்ள சொத்துக்கள் அவர்கள் இருவர் பெயரில் பூர்வீக சொத்துக்களை விற்று வாங்கப்பட்டது. என் பெயரில் உள்ள சொத்துக்கள் எவ்வளவு என்றால் 3 ஏக்கர் 11 சென்ட் வங்கி கடனுக்காக என் பெயரில் எழுதப்பட்டது. அது இல்லாமல் 1 ஏக்கர் 82சென்ட் அப்பா என் பெயரில் வங்கி கடனுக்காக கொடுத்தார். நான் தனிப்பட்ட முறையில் திருமணம் ஆன பிறகு என் மனைவி பெயரில் சொத்தை கிரையம் வாங்கியுள்ளேன். 1 ஏக்கர் 99சென்ட் கிரையம் வாங்கினேன். ஆனால் அது நான் என் மனைவிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆகும். அந்த செட்டில்மெண்ட் சொத்தை நான் தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கினேன். 1.9.2017 தேதியில் என் மனைவி சரஸ்வதிக்கு நான் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை தான் சொல்கிறேன் என்றால சரிதான். அதில் 26.7.2013ல் என் தகப்பனார் எழுதிகொடுத்த தானசெட்டில்மெண்ட் படியும் 29.7.2013 தேதியில் தகப்பனார், தாயார் எழுதி வைத்த செட்டில்மெண்ட் படியும், 13.11.2013 தேதியில் பாக்கியம் என்ற பாக்கியலட்சுமி அவர்கள் குமாரர்கள் அசோக்குமார், செந்தில்குமார், சசிகுமார் ஆகியோரின் முகவர் என்ற உரிமையில் என் தகப்பனார் ஆதிமூல கவுண்டர் எழுதிக்கொடுத்த சொத்துக்களை தான் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அப்பாவிற்கு 13.11.2013 தேதியில்

கிரையத்திற்கு என் தகப்பனாருக்கு எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் என் அப்பாவிற்கு நான் பணம் கொடுக்கவில்லை. நிலம் கொடுத்த நபருக்கு பணம் கொடுத்தேன். என் பெயரிலும், அய்யப்பன், பாலமுருகன் பெயரிலும் பாக்கியம் என்ற பாக்கியலட்சுமி மற்றும் அவர் குமாரர்களின் முகவர் என்ற உரிமையில் எனது தகப்பனார் எங்கள் பெயருக்கு 28.7.2006ல் ரூ.1,0,5000/க்கு ரூ.1,00,000/முன் பணமாக பெற்றுக்கொண்டு பாக்கி ரூ.5,000/தை 3 வருட காலத்திற்குள் பெற்றுக்கொண்டு ஒரு கிரைய உடன்படிக்கை பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரிதான். அதில் மொத்தம் எத்தனை ஏக்கர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 1ஏக்கர் 99 1/2 சென்ட் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த 1 ஏக்கர் 99 1/2 சென்ட் நிலத்தை தான் என் மனைவிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தேன் என்றால் சரிதான். 16.5.1981ல் வாதி சான்றாவணம் 1 முதல் 3 ஆவண கிரைய பத்திரங்கள் எவ்வுளவு ரூபாய்க்கு யாரிடம் இருந்து எந்தெந்த புல எண்களில் கிரையம் பெற்றது தெரியுமா என்றால் உஸ்மான் பாய் குடும்பத்திடம் வாங்கினார். அந்த கிரையம் வாங்கும்போது எனக்கு வயது சுமார் 10 ஆகும். அதனால் எனக்கு நேரிடையாக அந்த கிரையப்பத்திரங்களை பற்றி தெரியாது. அந்த கிரைய பத்திரங்களின் வாசகங்களில் மனைவியின் நகையை விற்று வாங்கியதாக வாசகம் காட்டப்படவில்லை என்றால் தெரியாது. அதை நான் படிக்கவில்லை. அந்த சமயத்தில் ஒரு பவுன் நகை என்ன விலை விற்றது என்று எனக்கு தெரியாது. யாருக்கு விற்பனை செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. 29.7.2013 தேதியிட்ட வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் சொத்து என் தகப்பனார் மற்றும் தாயாரால் எழுதி வைக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் பூர்வீக சொத்துகள் என்றால் பூர்வீக சொத்துக்களும் உள்ளது. அப்பா, அம்மா சம்பாதித்த சொத்துக்களும் உள்ளது. அதில் எங்காவது என் தகப்பனாரும் , தாயாரும் தனிப்பட்ட முறையில் சம்பாதித்ததாக வாசகம் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மொத்தம் எத்தனை ஏக்கர் குறிப்பிடப்பட்டுள்ளது என்று பார்த்ததால் தான் தெரியும். அதில் நெ.48,102,116 மற்றும் 25 பட்டாவாக கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதில் மொத்தம் 8 ஏக்கர் 56 சென்ட், சோழகனூர், தென்னமாதேவி, திருவாமத்தூர், அய்யங்கோவில்பட்டு ஆகிய 4 கிராமங்களில் உள்ள சொத்துக்கள் அடக்கம் ஆகும் என்றால் சரிதான். அதன் மொத்த மதிப்பு ரூ.37,74,868/என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அப்பா இந்த செட்டில்மெண்டை ரத்து செய்தாரா என்றால் ரத்து செய்யவில்லை. இந்த பத்திரத்தில் 3049/

2013 ஆவணத்தால் ரத்து செய்யப்படுகிறது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. ரத்து செய்யப்படவில்லை. வா.சா.ஆ.4 ஆவணத்தில் 3.87. 50 ஹெக்டர் நிலம் பட்டா எண்.48ல் என் தகப்பனார் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த செட்டில்மெண்ட் சொத்தை நான் யாருக்காவது செட்டில்மெண்ட் செய்து வைத்தேனா என்றால் வா.சா.ஆ.5 படி என் சகோதரி கற்பகம் அவர்களுக்கு 3ஏக்கர் 11செண்ட் மின் இணைப்புடன் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். (குறுக்கு விசாரணை பகுதியாக நிறுத்தி வைக்கப்படுகிறது.)